1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மருத்துவமனை கட்டிடங்கள் அல்லது இது போன்ற பிரச்னைகளைச் சீரமைக்கும் பணி பொதுப்பணித் துறையின் கீழ் இருக்கின்றது என்பதையும், அதனால் பல்வேறு இடையூறுகள் இருக்கின்றன என்பதையும் இந்த அரசு உணர்ந்து, இந்த இடையூறுகளைக் களைவதற்காக வழிவகைகளைச் செய்வதற்கான தன்மைகளை இன்றைக்கு பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றது.

சென்னை நகரில் கொசு ஒழிப்பு.

*வினா எண் 802—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் கொசுத் தொல்லையை ஒழிக்க ஏதேனும் தனித் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : கொசு ஒழிப்புத் திட்டம், தேசிய யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம், மற்றும் நகர்ப்புற மலேரியா திட்டத்தின் கீழ் சென்னை நகரில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. மேற் கூறிய திட்டங்களின்கீழ் கீழ்க்கண்ட சிறப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகிறது :—

(1) வளர்ந்த நிலையிலுள்ள கொசுக்களை ஒழிக்க ரூபாய் " 1,30,000 செலவில் 25 மிஸ்ட்பிளோயர்களும் '' 25 '' ஸ்விங் பாக்ஸ் கருவிகளும் '' வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(2) கழிவு நீர் பண்ணை, நீர் நிலைகளில் கொசுவை ஒழிக்க பவர் டில்லர்கள் பயன்படுத்தப்படுகிறது.

(3) கழிவு நீர் குழாய்களை சுத்தம் செய்ய தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(4) 1978–79-ல் மழை நீர் வடிகால் கட்டுவதற்கு ரூபாய் 39.80 இலட்சமும், கழிவு நீர் வடிகால் கட்டுவதற்கு ரூபாய் 14.70 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(5) கம்பூசியா என்ற வகை மீன்களை வளர்த்து, கிணறு கள், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் விடும் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 24

திரு. மு. அம்பிகாபதி : வேலையில்லாத் திண்டாட்டத்தை வறுமையைத்தான் ஒழிக்க முடியவில்லை. இந்தக் கொசுவை யாவது ஒழித்து ஏழை எளிய மக்கள் இரவில் நிம்மதியாகத் தூங்க வழிவகை செய்யப்படுமா? ஜாபர் ஜெட் விமானம் மாதிரி ராத்திரி கொசு பறக்கிறது. அந்தக் கொசுவை ஒழிக்க திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அரசு தீட்டுகின்ற திட்டங்களோடு மாண்புமிகு உறுப்பினர் போன்ற வர்களும், பொதுமக்களும் ஒத்துழைப்புத் தந்து இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்களானால் கொசுவை ஒழிப்ப தில் நாம் வெற்றி காணமுடியும்.

திரு. க. இரா. சின்னராசு : கொசுக் கொல்லி மருந்து அடிக்கிறார்கள். கொசு ஒன்று கூடச் சாவதில்லை. பெரிதாக வளர்ந்து பறக்கிறது. ஆகவே, புதிதாக ஆராய்ச்சி செய்து புதிய கொசுக் கொல்லி மருந்தைக் கண்டுபிடிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் ஏற்கனவே பயன் படுத்தி வந்த கொசு மருந்துகளின் தீவிரத்தை எதிர்க்கும் ஆற்றலை அந்தக் கொசுக்கள் பெற்றுவிட்ட காரணத்தால் இன்றைக்கு அந்த மருந்துகளை மாற்றி அடிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : கொசுவை ஒழிக்க திட்டம் வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு கொசு ஈ போல் பெரிதாக வளர்ந்து கொண்டே போகிறது. சானிடரி ஓர்க்கர்ஸ் இரண்டு மூன்று பேர் வேலை செய்யக் கூடிய இடத்தில் ஒருவர் வேலை செய்யக்கூடிய சூழ்நிலை இருப்பதால் இத்தகைய நிலைமை இருக்கிறது. ஆகவே, சானிடரி ஓர்க்கர்சின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி கொசுவை ஒழிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : சானிடரி ஓர்க்கர்ஸ் என்று சொல்லக்கூடிய சுகாதாரப் பணியாளர்கள் எந்தெந்த இடங்களில் குறைவான அளவில் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தேவையான அளவு நியமிப்பதற்கான நடவடிக்கை களை அரசு பரிசீலித்து வருகிறது.

1979 ஏப்ரல் 24]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: இப்போது இருக்கின்ற மருந்துகள் தரம் குறைந்திருக்கின்றது. ஆகவேதான் பூச்சி கொல்லி மருந்துகள் பூச்சிகளைக் கொல்லுவதில்லை. கொசு மருந்துகள் கொசுவைக் கொல்லுவதில்லை. ஆகவே, மருந்துகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து 'எபக்டிவ்' ஆன மருந்தைக் கண்டு பிடித்து கொசுக்களை ஒழிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பல்வேறு மருந்துகளைப் பயன்படுத்திய காரணத்தால் அந்தக் கொசுக்கள் மருந்தின் சக்தியைத் தாங்குகின்ற அளவுக்கு வளர்ந்து அவை தன்னுடைய சாலவைத் தடுத்துக்கொள்கின்றன. ஆகவே, அந்தக் கொசுக்களைக் கொல்ல ஆற்றல் மிகுந்த மருந்துகளை அரசு தேர்ந்தெடுத்து பயன்படுத்தி கொசுவை ஒழிக்க எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

மணிமுத்தாறு நகரியப் பகுதிக்கு மருத்துவமனை.

*வினா எண் 803—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மணிமுத்தாறு டவுன்ஷிப் ஏரியாவில் அரசு மருத்துவமனை ஒன்று ஆரம்பிக்குமாறு டவுன்ஷிப் அரசைக் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.